வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2451/அ2/2024 நாள் 24.06.2024

பொருள் பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – வரவு செலவுத் திட்டம் – 043-03 பள்ளிக் கல்வி சார்பான கணக்குத் தலைப்புகள் -2025-2026 ஆம் ஆண்டிற்கான எண்வகைப் பட்டியல் (Number Statement) மற்றும் நிலையான படிகள் சார்ந்த (Excel) படிவத்தில் தங்கள் பள்ளிக்குரிய விவரங்கள் பதிவு செய்து தயார் நிலையில் வைத்திருக்க தெரிவித்தல் மற்றும எண்வகைப் பட்டியல் சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய / தவிர்க்கப்பட வேண்டிய நிகழ்வுகள் – தொடர்பாக.

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்கக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 030169/பி1-இ1/2024, நாள் 14.06.2024 ( பெறப்பட்ட நாள் 20.06.2024)

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்கக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகளின் படி,வரவு செலவு திட்டம் -2025 -2026 ஆம் ஆண்டிற்கான எண்வகைப் பட்டியல் (Number Statement) தங்கள் பள்ளி / அலுவலகங்களுக்குண்டான ஊதியக் கணக்குத் தலைப்புகளில் சார்நிலை அலுவலகங்கள் மற்றும் அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பாட்டில் உள்ள கணக்குத் தலைப்பிற்கேற்ப ஜுலை -2024 நிலவரப்படி 2025-2026 எண்வகைப் பட்டியல் தயார் செய்யும் கணக்கீட்டிற்கும் , அளவுகோல் பதிவேடு, சம்பளப் பட்டியலில் ,பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள்/ காலிப்பணியிட விவரம், பணியிடங்கள் குறித்து IFHRMS / EMIS ல் உள்ளீடு செய்யப்பட்ட விவரம் , பணிநிரவல் / உபரி பணியிடங்கள் இயக்ககத்திற்கு சரண்செய்யப்பட்ட விவரம், தேவையான அரசாணைகள் ஆகிய விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தங்கள் பள்ளியின் எண்வகைப் பட்டியல் தயார் செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் தவிர்க்கப்பட வேண்டிய நிகழ்வுகள் சார்ந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுரைகளை தறவிறக்கம் (Download ) செய்து எவ்வித தவறுகளும் இன்றி உரிய படிவங்களில் பூர்த்தி செய்து தயார் நிலையில் வைத்திருக்குமாறும் அப்படிவங்கள் பெற உரிய தகவல் தெரிவித்தவுடன் எவ்வித காலதாமதமின்றி அக்கூட்டத்தில் சமர்பிக்குமாறு அனைத்து அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலை/ உயர்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**

1. பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள்
2. உரிய தலைப்பு கணக்கு படிவங்கள்

//ஓம் செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்
அனைத்து அரசு / அரசு உதவிபெறும் மேல்/ உயர்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்

1. சென்னை-6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு ( இடைநிலை ) தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பலாகிறது.